422

Registered No. M. 520.



# சக்கரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL 12. தொகுதி 12. | September 1916. செப்டம்பர் 1916. | NO. 2. பகுதி 2.

பொருளடக்கம். — பக்கம்.

1. சான்றோரென்கை யீன்றோர்க்கழகு. ... ... 41
2. ஆசாரமஞ்சரி ... ... 44
3. கல்வியா-உடைமையா பெரிது? ... ... 47
4. சந்திரனை விழுங்கின கழுதை ... ... 49
5. பிள்ளைகளின் மூளை ... ... 54
6. சுகாதாரம் (வாய்வு) ... ... 58
7. கிரீஸ் தேசத்துப் பீமசேனன் ... ... 61
8. புல்லறிவாண்மை ... ... 63
9. நட்பு ... ... 64
10. ஸ்வாமி விவேகாநந்தர் பக்தியோகம் ... ... 66
11. யுத்தம். ... ... 70

கோ. வடிவேலுசெட்டியார், பத்திராசிரியர்-பத்திராதிபர்
கோமளீசுவரன் பேட்டை, சென்னை.

Sacchidhanandham Press, Komaleeswaranpet, Madras

17

# லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை கோமளேசுவரன் பேட்டையில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடைபெற்றுவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது ஏனைய பத்திரிகைகளைப் போலல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பேறும் பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயுமன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், சிறுவர் முதியோர் யாவருக்கும் பயன்படுமாறு செவ்விய நடையி லெழுதப்பட்டு வருகின்றன. தினசரிப் பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிரதியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்துங் கைவிடமாட்டார்களென்பதும், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியதா மென்பதும் நன்கு விளங்கும். சாம்பிள் காப்பி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

## சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

| | | | |
|---|---|---|---|
| ஆறு மாதத்திற்கு | ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு | ரூபாய் 3-8 |

(நேட்டால்-சிங்கப்பூர்-பினாங்கு).

| | | | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபாய் 5-8 | ஆறு மாதத்திற்கு | ரூபாய் 3-0 |

---

இதுகாறும் வெளிவராத யூகிமுனிவர் வாதவைத்திய நூல்கள்.

வாதாங்க நிகைஷவிதி—300, வாதவைத்திய விளக்கம்-200 மதிவெண்பா—100 - விலை ரூபாய் 1.

தேரையர் கரிசலை-யூகிமுனி கரிசலை-கல்கண்டு ருத்திரம் அணா 12

---

# சக்ரவர்த்தினி.

"சக்ரவர்த்தினி" என்னும் பெயர்பூண்ட மாதப்பத்திரிகை சென்றபதினொரு வருடங்களாகத் தமிழுலகெங்கும் பரவிவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது எமது வாயிலாக 1912-ம் வருஷம் பிப்ரவரிமாத முதல்கொண்டு லோகோபகாரி ஆபீசில் நடைபெற்றுவருகின்றது. இதில் கல்வியறிவு ஒழுக்கங்களபிவிர்த்தியாவதற் குரிய விஷயங்களும், மாதராடவர் தருமங்களும், மனோலய சாதனங்களும், பிறவும் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றமையின், இது யாவரும் அத்தியாவசியமாக வாசித்தற் குரியதாம்.

## சந்தா விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியா-சிலோன்-பர்மாவிற்கு வருடத்திற்கு | ரூபாய் 2-0—0 | பிறதேசங்கட்கு-வருடம் | 2—8—0 |
| ஷை 6-மாதத்திற்கு | ரூபாய் 1-4—0 | ஷை 6- மாதத்திற்கு | 1—8—0 |
| | | தனிப்பிரதி | 0—3—0 |

# சக்கிரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”.

VOL-12 } தொகுதி-12 } September செப்டம்பர் 1916. { No-2. { பகுதி-2.


## சான்றோரெனகை யீன்றோர்க்கழகு.

சான்றோரானவர் தம் தந்தை தாயார்க்கு அழகு செய்பவராகவிருத்தலின், ஒவ்வொருவரும் சான்றோராக முயலுதல் வேண்டும். முன்னறிதெய்வமாகிய தந்தை தாயர்க்கு அழகு செய்யாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத லுடையவராகாது போதல் நிச்சயமாம். சான்றோராகாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையவரா யிருத்தல் ஒருவாற்றானு மின்மையின், சகமனைவர் சான்றோராக வொவ்வொருவரும் இடைவிடாது முயன்று வருதல்வேண்டும். சான்றோரென்பவர் நல்லனவென்று சொல்லப்படுங் குணங்கள் பலவற்றானும் நிறைந்திருப்பவராவர். அக்குணங்கள் அளவுகடந்த வுபகாரம், ஈகை, கர்வமில்லாமை, பிறர்குற்றங் கூறாமை, இடம்பமில்லாமை முதலாயினவாம். இக்குணங்கள் வாவியில் நீர்நிறைந்திருத்தல்போல, எவரிடத்திருக்கின்றனவோ அவர்தாம் சான்றோரென்று கூறுதற்குத் தகுதியுடையவராக விருக்கின்றார். இக்குணங்களால் நிறைந்து, அவற்றை யாளுதல் கல்வி கேள்வி அறிவொழுக்கமில்லாதவர்க்கு எவ்வாற்றானும் முடியாதாகலின், ஒவ்வொருவரும் கல்வி கேள்வி முதலியவற்றை யுடையவராதல் வேண்டும். கல்வி கேள்வி முதலியவை முன்னறி தெய்வங்களாகிய தந்தைதாயர் உதவியில்லாவிடத்து அடைதல் பெறுதற்பாலனவல்லவாகலின், ஒவ்வொருவரும் தந்தைதாயர்க்கழகு செய்யத் தாம் சான்றோராதல் வேண்

மம். ஒவ்வொரு தந்தை தாயரும் தம்புத்திரர் சான்றோராதல் வேண்டுமென்று விரும்புகின்றாரென்பது பிரித்தாய்ந்து நோக்கினால் நன்கு விளங்கும். தந்தைதாயருள் பலர் இடம்பம், கர்வம், அடங்காத அகங்காரம், காமம், குரோத முதலிய பற்பல குறைவுடையராயினும், தம் புத்திரர்கள் அயோக்கியராக விரும்புவதில்லையாம்; அவர்கள் தம்புத்திரர்கள் மேன்மேலு முயர்ச்சியடைய வேண்டுமென்றே கருதிவருகின்றனரென்பது தம் குடும்ப விவகாரத்தைச் சற்றாலோசித்து நோக்குவார்க்கு விளங்காமற்போகாது.

தாய் தன் புத்திரர் சான்றோராயிருக்கின்றனரென்று அறிவுடையோர் சொல்லுவதைக் கேட்க விரும்புகின்றாள்; தந்தையோ தன்புத்திரரைச் சான்றோராக்க முயலுகின்றான். தந்தையின் முக்கியக் கடன் தன்மைந்தனைச் சான்றோனாக்குதலேயாம். இது பொன்முடியார் புறநானூற்றில் "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்று கூறியிருப்பதனாலும் நன்கு விளங்குவதாம். தந்தை தன்மைந்தனைக் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தவனாகச்செய்து விடுவானாயின், அம்மைந்தன் சான்றோனாகவிருத்தல் ஒருவாற்றானும் தப்பில்லையாம். ஒருபொருள் முதலின் விழுதற்கு அதனது கனமை காரணமாயிருக்கின்றது; அப்பொருள் அதன்பின் விழுதற்கு அவ்விழுகலையுண்டாய அப்பொருளின் வேகம் காரணமாயிருக்கின்றதென்பது பிரித்தாய்ந்து நோக்கினால் செவ்வனே விளங்கும். ஒருபொருள் விழுதலால் அப்பொருளிடத்து வேகமுண்டாதல்போல, ஒருவன் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கமுடையவனாவானாயின், அவனிடத்து சால்பு நிச்சயமாகவுண்டாவதாம். சால்புடையார்க்கு (சான்றோர்க்கு) மிகச்சிறந்த குணமாயிருப்பது பிறரது குற்றத்தைக் கூறாமையாம். தவத்தினார்க்கு ஒருயிரையுங் கொல்லாத அறஞ் சிறப்புடையதா யிருத்தல்போல, சான்றோர்க்குப் பிறரது குற்றத்தைக் கூறாதகுணம் சிறப்புடையதாக விருக்கின்றதென்பது நமக்கு விளங்குமாயின், நாம் மிகுவெளிதாகச் சான்றோராதல்கூடும். பிறரது குற்றத்தைக்கூறா திருப்போமாயின், நாம் சான்றோராதற்குத் தடையுமின்றாம்.

ஸ்ரீராமர், தருமபுத்திரர் முதலாயினோர் சான்றோராயிருந்தனரென்பது அவர்கள் சரித்திரத்தைப் படித்துணர்ந்தார்க்கு விளங்காமற்போகாது. அவர் நமக்கு யாதா சிறந்தவணிகலமாக விருந்

தது? பிறர் தம் குற்றத்தைக் கூறுமையேயன்றோ? பிறரது குற்றத்தைக்கூறுமையென்னுங் குணத்தை அணிகலமாகக் கொள்வோமாயின், நாம் சான்றோராகி, நம் தந்தைதாயர்க்குப்பேரழகு செய்பவராவோம். ஒருவன் தன் தந்தைதாயர்க்குப் பேரழகு செய்தலாவது அறிவுடையார் அவனைப்பற்றிப் பேசும்போது இவனைப்பெறுதற்கு இவனது தந்தைதாயர் என்ன தவஞ்செய்தனரோ என்று கூறுதலாம்.

இவ்வழகினும் அவர் தமக்கு வேறெவ்வழகு வேண்டும்? இவ்வழகினையுடையவரன்றோ புத்திரப்பேற்றினைப் பெற்றவராவர்? இடம்பம், கர்வம், அடங்காத அகங்காரம், காமம், குரோதம், உலோபம், அவிவேகம், பேருணவு, பெருந்தூக்கமுதலிய குணங்களால் நிறைந்த புத்திரர்களையுடையவர்க்கு என்ன அழகுண்டாகும்? அன்னவர்க்கெப்போது முண்டாவது அழுகையேயாம்.

தந்தைதாயரிடத்து வணக்கமுடையவராக விருக்கும் புத்திரர்கள் சான்றோர்களே விரும்பப்படுமென்பதற்குத் தடையொன்றுமில்லையாம். இராமர் தந்தையுரை கடவாது வனஞ்சென்றமையையும், பூரு என்பவன் தனது தந்தையாகிய யயாதிவேந்தனது மூப்பை(கிழத்தனத்தை) ஏற்றுக்கொண்டமையையும், தர்மவியாதனென்னும் வேடன் தன் தந்தைதாயர்களிடத்துத் தவறில்லா தொழுகினமையையும், முறையே இராமாயணம், பாரதம், விஷ்ணுபுராணமென்பவற்றைப் படித்துணர்ந்தவர்க்கு மைந்தர் தம் தந்தை தாயர்க்குச் செய்யு மழகு விளங்காதிராது. "தந்தைதாய்ப் பணித்தல் செய்யுந் தவமலாற் றவமேயில்லை" என்பதுணர்ந்தொழுகும் புத்திரரைப் புகழ்ந்து பேசாதாரியார்? ஒருவருமிலராவர்! அப்புத்திரர் பிறர்குற்றத்தை மறந்துங் கூறுவதில்லையாம்; அவரிடத்து அன்பு, ஞானம், உபகாரம், தாட்சணியம், உண்மையுரைத்தல் என்பன பூரணமதிபோலப் பிரகாசித்துக்கொண்டிருப்பனவாம். இத்தன்மையராய புத்திரர்களையுடையவர்களுக்கு இம்மைப்பயன் மறுமைப்பயனென்னு மிரண்டும் தவறாது வாய்ப்பனவாம்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்—தந்தை புதல்வனுக்குச்செய்யும் நன்மையாவது கற்றோ

சது அவையில் அவரினு மிக்கிருக்குமாறு கல்வியுடையவனாக்கு தல்'' என்று திருவள்ளுவர் கூறியவாறு தந்தை தன்மைந்தனைக் கற்றோர் சபையில் அவரினுமிக்கிருக்குமாறு கல்வியுடையவனாக்கு வானாயின், அம்மைந்தன் சான்றோனாவது திண்ணமாம். தந்தை தன் கடனாகிய இதனைத் தன்மைந்தனுக்குச்செய்து விடுவானாயின், அம்மைந்தனை யறிவுடையார் புகழ்ந்து பேசாதிருப்பதில்லையாம். அப்புகழ் மொழியைக் கேட்பதே அவனைப் பெற்றவர்க்கழகாம்; வேறெதுவு மழகாவதில்லையாமென்பதை விளக்கவே நமது ஞானத்தாயாகியஔவைப்பிராட்டியார் ''சான்றோனென்கை யீன்றோர்க்கழகு—தம்புத்திரரைச் சான்றோரென்று அறிவுடையார் சொல்லுதலைக் கேட்டலே அவர்தம்மைப் பெற்றவர்க்கழகாம்'' என்றருளிச்செய்தனர்.

புத்திரர்கள் தாம் சான்றோராதற்குரிய செயலை மறவாது தவறாதுஞ்செய்துவருவாராயின், அவர் தம் தந்தைதாயர்க்குப் பேரழகுசெய்பவராக விருப்பதன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையவராய், நன்மையென்று சொல்லப்படுவன வனைத்தையும் பெறுதற்குரியவராவரென்பது சிதையாத சித்தாந்தமாம். தந்தை தனதுகடமையையும் மைந்தன் தனது கடமையையும்மறவாது செய்து வருதல்வேண்டும்; வந்தாற்றான், தந்தை தான்பெறுதற்குரியதையும் மைந்தன் தான் பெறுதற்குரியதையும் பெறுதல் கூடும். மைந்தன் சான்றோனாதலே இக்கோக்கில் அவன் பெறுதற்குரியதைப் பெறுதலாம்.

புத்திரர் சான்றோராவதால், தந்தைதாயர்க்குப் பேரழகும் பெருவகையு முண்டாவனவாயிருத்தலின், ஒவ்வொருவரும் தம் புத்திரர்களைச் சான்றோராக்க முயலுதல் வேண்டும்; இம்முயற்சியுடையவர்க்கு நலமனைத்து முண்டாவனவாம்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

# ஆசார மஞ்சரி.

(முன்தொடர்ச்சி.)

## நுண்ணிய நூலறிஞர் செய்வன விவையெனல்.

(41) நுண்ணிய நூற்பொருளை யுணர்ந்தவர் ஒருவர் தமது கண்ணிற்கு மையிட்டிய (அஞ்சனக்) கோலால், அக்கண்ணெச்சி லோடு தமது கண்ணிற்கு மையிட்டார்; தமதொரு காலால் மற் றொரு காலைத் தேயார்; புண்ணியந் தருவனவாகிய (வில்வம், துளசி, புஷ்ப முதலிய) பொருள்களைத் தமது தலையில் வைத்துக் கொள்வதுடனே கண்களிலும் ஒற்றிக்கொள்வர்.

## கணவர் தம்மனைவியரைப் பார்க்கக்கூடாத நாளையும் பிரியக்கூடாத நாளையுங் கூறல்.

(42) அறிவுடையார் தம்மனைவியர்க்குப் பூப்பு நிகழ்ந்தால், அது நிகழ்ந்த நாள் முதற்கொண்டு மூன்று நாளளவும் அவரைப் பாரார்; அவர் நீராடியபின் நீராடிய நாள் முதற்கொண்டு பன்னிரண்டு நாளளவும் (கரு வயிற்றுறுங் காலமாகலின்) அவரை விட்டுப்பிரியார். இவ்வாறிருத்தல் வேண்டுமென்பது பேரறிவாளரது நிச்சயமாம்.

## கணவர் தம்மனைவியருடன் கலத்தல்கூடாத நாள்களிவை யெனல்.

(43) அறிவுடையார் தமது மனைவியருடன் நடுப்பகலும், நடுக்கங்குலும், காலையும், மாலையும், (அரனுக்குரிய நாளாகிய) திருவாதிரை நட்சத்திரமும், (அரிக்குரிய நாளாகிய) திருவோண நட்சத்திரமும், அமாவாசையும், பௌர்ணமியும், தாம் பிறந்த நாளுமாகிய இந்த நாட்களில் தமது மனைவியருடன் கூடார்.

நடுக் கங்குல்-நடுராத்திரி.

## இன்னின்ன காரியஞ் செய்தல் கூடாதெனல்.

(44) அறிவுடையார் காறுவை மணையின்மீது வையார்; மணையைக் கவிழ்த்து வையார்; புத்தாடையைத் தலைக்கடையில் விரியார்; பலர் வருதற்குரிய தலைக்கடையில் இனியெவரும் வாராரன்றோவென ஆராய்ச்சி செய்யாது கட்டுவிட்டுப் படுக் கார்; தம்மை யறியாதவரது தலைக்கடையிற் சென்று நில்லார்.

புத்தாடை-புதுவஸ்திரம். காறு-அளக்குங் கருவி.

### மணப்பந்தலில் இன்னின்ன பொருள்களைப் பரப்புதல் கூடாதெனல்.

(45) மணப்பந்தலின் கீழ் குப்பை பெருக்கும் துடைப்பமும், தூசோடுகூடிய செத்தையும், பூவின் புறவிதழும், பழங் கருங்கலங்களும், கிழிந்த கட்டிலுமென்னு மிவ்வைந்தனையும் பரப்புதல் கூடாது. பழங் கருங்கலங்கள்-பழைய கரிப்பானைகள்.

### நல்லதுறல் வேண்டடார் செய்வன இவையெனல்.

(46) தமக்கு நல்ல பாக்கியமுண்டாதல் வேண்டுமென்று விரும்புகின்றவர் சிறு காலையிலெழுந்து, தமது வீட்டிலுள்ள செத்தைகளைப் பெருக்கி, கருங்கலங்களைக் கழுவி, ஆப்பிநீரை யெங்குந்தெளித்து, நீர்சாலும் கரகமும் புறம்பே நிறைய படிமணை ரணிந்து, தம்வீட்டிற்குச் சிறப்புண்டாக, அடுப்பிலுள் தீயிட்டு மூட்டக்கடவர். (இவ்வாறு செய்வது மாதர்தம் கடமையாம்.)

சிறுகாலை-விடியற்காலம், கருங்கலங்கள்-முன்னாள் சமைத்த கரிப்பானைகள், ஆப்பி-பசுஞ்சாணம், நீர்ச்சால்-நீர்வார்த்து வைக்கும் சால், கரகம்-நீர்ச்சால்மீது வைக்கும் மண் பாத்திரம்.

### வேதாத்தியனஞ் செய்தற்குரியதாகாத நாள்களிவை யெனல்.

(47) அஷ்டமி திதியும், அமாவாசையும், பௌர்ணமியும், சதுர்த்தசி திதியும், தாம் வசிக்கும் பூமியைப் பாதுகாக்குமரசர்க்கு விபத்துண்டாய நாளும், மிகுதியாகப் பூகம்பமுள்ள நாளும், விண்ணதிர்ப்புள்ள நாளும், தமக்குத் தூய்மையில்லாத நாளுமென்னு மிந்நாள்கள் பார்ப்பார் இலக்குநூல் ஓதுதற்குரியனவாகாத நாள்களாம். பூகம்பம்-பூமியசைதல், விண்ணதிர்ப்பு-இடி முழக்கம், தூய்மை-தீட்டில்லாமை, இலக்குநூல்-வேதம்.

### அறமும் விருந்தும் தவறாது செய்தற்குரிய நாள்களிவை யெனல்.

(48) அறிவுடையார் தாம் செய்யும் கலியாண நாளும், தேவர்க்குச் சிறப்பான (ஏகாதசி, கிருத்திகை முதலிய) நாளும், பிதிர்களுக்குச் சிறப்புச்செய்யும் நாளும், தேவர்க்குத் திருவிழா நடக்கும் நாளும், வேள்வி செய்யும் நாளும் என்னுமிவ்வகை நாள் களிலும் மறவாது கொடையறஞ் செய்வர்; விருந்தினர்க்கு (அறுசுவைக் கறிகளுடன்) சோறிடுவர்.

பிதிர்களுக்குச் சிறப்புச்செய்யும் நாள்-சிராத்தஞ் செய்யும் நாள்; வேள்வி-யாகம்; கொடையறஞ் செய்தல்-இரப்பார்க்கில்லை யென்னாது அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தல்.

எவரும் உடையுடை முதலியவற்றைத் தத்தமக் கேற்றவாறு கொண்டொழுக வேண்டுமெனல்.

(49) எவரும் உடுக்க வுடையும், நடக்குநடையும், சொற் சோர்வடைதலும், வைதலும் என்னும் இந்நான்கையும் தாம் அரசனாற் சிறப்புறப் பெற்றமைக்கும், தமது கல்விக்கும், தமது ஆண்மைக்கும், தமது குடிப்பிறப்பிற்கும், தக்கவாறாக மேற்கொண்டொழுகக் கடவர்.

சொற் சோர்வு-சொற்றவறுதல், வைதல்-திட்டுதல், ஆண்மை-ஒன்றற்குந் தளராமை.

நற் கேள்வியுடையவர் செயல்களிவை யெனல்.

(50) பிறர் பெறுதற்கரிய நற் கேள்வியுடையவர் பலர் நடுவிலிருந்து பிறரைப் பழித்துப் பேசார்; குறைத்துப் பேசார்; பலர் நடுவிலிருந்து நித்திரை செய்யார்; தாம் செய்வதற்கு முடியாத காரியத்தைப் பிறர்க்குச் 'செய்கின்றோமென்று கூறிச் செய்யா தொழியார்; வறியவரை மறந்தும் தகுதியில்லாது நிந்தித்துக் குறைத்துப் பேசார்.

வறியவர்-தரித்திரர்.

(வரும்)

கல்வியா - கடமையா பெரிது?

உலக ஞானத்தையும், ஆன்ம ஞானத்தையும் உண்டு பண்ணும் நூல்களைத் தக்கவாறுணர்வது கல்வி யெனப்படும்; அல்லது புத்தியை விரியச் செய்யும் ஆராய்ச்சியும் கல்வி யெனலாம். கடமையாவது அவரவர்கள் செய்ய வேண்டும் விதிகர்மங்களை, அஃதாவது ஆன்றோருரைத்த ஒழுக்கங்களை யநுஷ்டிப்பது கடமையாம். இதனை வடமொழியில் கர்த்தவ்ய மென்பர். இவ்விரண்டனுள் கல்வியா, கடமையா, எது பெரிதென்பது கண்டு கூறத்தக்க விஷயமாம். சிலர் கல்வியே முக்கியமா மென்றும், வேறு சிலர் கடமையே முக்கியமா மென்றுங் கூறுகின்றனர். ஒழுக்க மின்றிய கல்வியானது எக்காலும் பயனைக் கொடுப்பதின்று

மென்பது இன்னாம்; கல்வியின்றிய ஒழுக்கமேயா மெனின் அவசியம் பயனைக் கொடுப்பதேயாம். ஒழுக்கமின்றிய கல்வியானது குருடன் கையில் தீபத்தைக் கொடுத்து வழி நடக்கக் கூறுவதோ டொக்கும். கல்வியின்றிய ஒழுக்கம் பட்டப்பகலில் கண்ணுடையோன் வழி நடப்பதோ டொக்கும். கல்வியும் ஒழுக்கமும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது தீபத்தின் சகாயத்தால் இரவு வழிநடப்பதோ டொக்கும். ஆதலின் இயல்பாகிய ஒழுக்கம் பயனைத் தருவதாம்; கல்வியுடன் கூடிய வொழுக்கம் அதனினு மிகுதியாகிய பயனை யளிக்கும்; வெறுங்கல்வியானது ஒரு சிறிதும் பயனை யளிப்பதின்றாம். மாறாத தீமையையும் விளைவித்தல் கூடும். கல்வியை நாம் எவ்வழியாகச் செலுத்துகின்றேமோ, அவ்வழியாக அது பயனை யளிப்பதாம். எங்ஙனம் நெருப்பை நாம் முறையாக மூட்டுவோமாயின் அது பாகம் முதலிய காரியங்களால் நமக்கு உதவியைச் செய்கின்றது முறைபிறழச் செய்வோமாயின் வீட்டை வேகவைத்து இடரை விளைவிக்கின்றது. அங்ஙனமே கல்வியும் கற்போனது செய்கையை யொட்டி அநுகூலப்பிரதிகூலங்களை யளிக்கின்றது. ஒரு சந்யாசி வேதாந்த சாஸ்திரங்களை நன்குணர்ந்து சிறிதேனும் அநுபவமில்லாது யாத்திரை செய்து கொண்டிருந்தார். இவரது வாக்கின் சாதுரியத்தால் பலரும் உண்மைத் துறவி யென்றே கருதி யிருந்தனர். சில ஸ்திரீகளும் இவருக்குத் தொண்டு புரிந்து வந்தனர். ஒருநாள் விதவையாகிய ஒரு மங்கையை நோக்கி "அம்மணி! எல்லாம் பிரஹ்மந்தானே; உனது சரீரமும் எனது சரீரமும், எல்லாமும் பிரஹ்மத்தைத் தவிர வேறில்லை; ஆதலின் நம்மிருவரது சையோகத்தால் பிரஹ்மத்திற்குக் குறைவு வருவதின்றாம் எனக்கூறி அப்பெண்மணியின் அருகிற் சென்றனர்.

"இதோ திரும்பி வருகிறேன்" எனக்கூறி அப்பெண் வீட்டினுட் புகுந்து ஒரு இரும்புத் துண்டைப் பழுக்க வைத்து, "ஸ்வாமின் இந்த இரும்புத் துண்டும் பிரஹ்மந்தான்; தங்கள் சரீரமும் பிரஹ்மந்தான். இதைத் தங்கள் முதுகின் மீது வைக்கின்றேன், பின்னர்த் தாங்கள் கூறியபடியே செய்வோம்"; எனக் கூறி ஸ்வாமிகளினருகிற் சென்றனள். உடனே வேதாந்தத்தைப் பறக்க விட்டு ஸ்வாமிகள் ஓட்டம் பிடித்தனர்; இக்கதையால் கல்வியின்றிய அப்பெண்மணியின் ஒழுக்கம் பெரிதா? அல்லது ஒழு

க்கமின்றிய ஸ்வாமிகளது கல்வி பெரிதா? என்பதனை நன்கு கவனிப்போமாயின், ஒழுக்கமே யாவற்றினுஞ் சிறப்புடையதாமென்பது நன்குவிளங்கும். அன்பர்களே! ஆன்றோர் கூறிய ஒழுக்கமே கல்வியினும் மேன்மையாதலின் அதனையே மேற்கொள்ளுதல் வேண்டுமென்பது ஒருதலை.

ஒரு மாணவி.

## சந்திரனை விழுங்கின கழுதை.

(முன் தொடர்ச்சி)

இரவு வந்தது. பாழூர் ஜனங்களெல்லாம் மந்தை வெளியில் கிழக்கு முகமாய் நின்றுகொண்டு வானத்தைப் பார்த்த வண்ணமாக இருந்தார்கள். சூரியன் அஸ்தமித்து நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு நாழிகைகளுமாயின; சந்திரனைக் காணவில்லை. மேலும் கல்லிருள். பறைகூத்தன் சொன்னபடி சந்திரனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்கக்கூடும் என்கிற சந்தேகத்திற்கும் வழியில்லை. ஏனெனில் வானம் மிகவும் கருமையாக இருந்தது. இவ்வளவு கருமையான மேகம் பாழூரில் சாதாரணமன்று. அவ்வூரில் கார்த்திகை, மார்கழியில் மாத்திரம் சிற்சில வருஷங்களில் மழை பெய்வதுண்டு; வயல் வெளிகளெல்லாம் வானம் பார்த்த பூமிகள். ஜனங்கள் கூடியவரையில் சிரமப்பட்டு எத்தம் இறைத்துத்தான் பயிரிட்டுவருகிறார்கள். நிலக்காரனுக்குக் குத்தகை கொடுத்ததுபோக மிச்ச மானால் முதல் ஆறுமாதம் நாளைக்கு ஒரு வேளையும், மற்றாறுமாதம் இரண்டு நாளைக்கு ஒரு வேளையுமாகத்தான் அவர்களுடைய போஜனத்திற்குக் கட்டிவரும். ஓய்வில்லாமல் வருஷமுழுதும் உழைப்பு. பலர் ஒருவேளை போஜனம், அநேக சந்தர்ப்பங்களில் உபவாசம். கல்வி சம்பந்தமான எண்ணம் அவர்களுக்கு எங்கிருந்து வரப்போகிறது?

தவிர அக்கிரகாரம் ஒருகாலத்தில் செழிப்பாக இருந்தது. இப்போது அங்குள்ள 20 வீடுகளில் 15 வீட்டுக்காரர்கள் சமையல் முதலிய பரிசாரகத்தொழில் செய்து ஜீவனம் செய்கிறார்கள். வீடுகளோ குடிசைகள். அவர்களுக்கும் கல்வி கற்க நேரமில்லை. நன்றுந் தெரியாமற் போனாலும், சூத்திரன், பறையன் இவர்களை

இகழ்ச்சியாகவும், ஏளனமாகவும் பேசுவதே தர்மமெனக்கொண்டு, கௌரவத்தை விடாமல் காலங்கழிக்கிறார்கள். மற்ற 5 வீட்டுக்காரர்கள் கொஞ்சம் பொருளாளிகள். இவ்வூர் நிலங்களில் பாதி அந்த 5 வீட்டுக்காரர்களுக்கும், இன்னொருபாதி அருள் குப்பத்து நாய்க்கனுக்கும் சொந்தம். பாழூர் குடியானவர்களின் ஏழைமைக்கு இந்தப் பிரபுக்களே காரணம். ஒவ்வொரு குடியானவனுக்கு அவனவன் நிலத்தின்மீது இரண்டரை வட்டிக்குக் கடன்கொடுத்து நாளடைவில் அந்நிலங்களை, ஸர்க்கார் நியாயஸ்தல தீர்மானங்களின் உதவியினால் கைக்கொண்டு விட்டார்கள். ஆகவே அக்கிரகாரத்தாராலும், அருள் குப்பத்து நாய்க்கனாலும் குடியானவர்களுக்கு ஹிம்சையேயொழிய, ஒருவிதமான உபகாரமுமில்லை. ஆகையால் இவர்கள் தங்களுக்குள்ள அறிவைக் கொண்டு கூடியவரையில் பிழைத்துவருகிறார்கள். மேலும் பாழூரில் அடர்ந்த தோப்புண்டா? பெரிய ஏரிஉண்டா? நல்ல ஆடிகாலத்து மழையைக் கண்டதார்? கார்மேகத்தைப் பார்த்ததார்? இக்காரணங்கள்பற்றி, அன்று சந்திரனை விழுங்கினது முதல், வானத்தின் தன்மை அவ்வூர் ஜனங்களுக்கு அத்யாச்சரியமாகவும், அசாதாரணமாகவும் தோன்றிற்று.

சூரியன் அஸ்தமித்து 10 நாழிகைகளாயின. இன்னும் சந்திரனைக்காணோம். ஜனங்கள் மிரண்டுவிட்டார்கள். அந்த மிரட்சிக்கு வேறொரு காரணமுண்டு. வண்ணான் அருணாசலம் தன்னூரில் கொஞ்சம் கல்வி யறிவுடையவன்; அவனுக்குப் படிக்கத் தெரியும். வேலை செய்த நேரம்போக மற்ற வேளையில், தெருத்திண்ணை மீது உட்கார்ந்து கொண்டு பாரதம், குசலவன், நல்லத்தங்காள் முதலிய கதைகளைப் படித்துக் கொண்டிருப்பான்; அவனுக்குப் பூண்டு வர்க்கங்களெல்லாம் தெரியும். தவிர ஏர்மாடுகளையும், கழுதைகளையும் நோயில்லாமல் காப்பாற்றும் வகையையும் அறிவான். மற்றவர்களைப் போல அவன் அடிக்கடி வருத்தப்படுகிற வழக்கமில்லை. அக்கிரகாரத்துப் பிரபுக்கள் கையில் சிக்காதவன் பாழூரில் இவனொருவனே. இக்காரணங்களாலே, அவ்வூர் குடித்தனக்காரர்களெல்லாம் அவனை ஒரு மந்திரவாதியாக மதித்திருந்தார்கள். மந்திரவாதியின் கழுதை சந்திரனை விழுங்குதல் சாத்தியமெனக் கொள்ளும்படி நேரிட்டது. அதற்கேற்ப சந்தர்ப்பங்களெல்லாம் ஒத்திருந்தன.

[illegible] ராத்திரியில் குடியானவர்களுக்குக் கோபம் பிறந்து விட்டது. அவர்களுள் இருபது பேர் சேர்ந்து தடிகளுடன் அருணசலத்தின் வீட்டிற்குப் போய்க் கதவைத் தட்டினார்கள். "யாரது" என்றான் அருணசலம். "நாங்கள் தாம்" என்று குடியானவர்கள் பலமாகச் சொன்னார்கள்.

அ:—நாங்களென்றால், யார்?

கு:—முக்கய்யர், நயினா உடையான், கூத்து கப்பன் முதலானவர்கள்.

அ:—இந்நேரத்தில் எங்கு வந்தீர்கள்? என்ன வேண்டும்?

கு:—எங்களுக்கு உன் கழுதை வேண்டும்.

அ:—என் கழுதையா? ஏன்?

கு:—அதனைக் கொல்ல.

அ:—என் அயிலைக் கொல்லவா? அது உங்களை என்ன செய்தது?

கு:—அது சந்திரனை விழுங்கி விட்டது. எங்களுக்குச் சந்திரன் அவசியம்.

கலீரென நகைத்தான் அருணசலம்-பலமான சிரிப்பு. அறுபது வயதுள்ள அவன் இந்நாள் வரையில் அங்ஙனம் சிரித்ததேயில்லை.

கு:—சிரிக்க வேண்டாம்; பரிகாசங் கூடவா? போதும்; கழுதையை ஓட்டிவா

என்று சொல்லிக்கொண்டே தடிகளால், ஓங்கித் தெருக் கதவை இடித்தார்கள்.

அருணசலம் கொஞ்சம் பயந்தான். விவகாரம் பலக்கிறதைக் கண்டு, எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

உடனே அடுக்கு நயினா, அயிலு சந்திரனை விழுங்கின சமாசாரத்தை ஆதி யோடந்தமாய்த் தெளிவாகச் சொன்னான்.

"நீங்கள் சொல்லுகிறது மடத்தனமே யொழிய உண்மையன்று. இருந்தாலும் என் கழுதை சந்திரனை விழுங்கினதைப் பார்த்ததார்? என்றான் அருணசலம்.

"நயினா தான் பார்த்தான்" என்றான் கிழவனான முக்கய்யர்;

"இல்லை பில்லை, வெல்லக்கடை வாத்தி பார்த்தான்" என்றான் நயினா.

"இல்லை, சோவி...இல்லை. கணக்கன்.........

"சரி, யார் பார்த்தாலென்ன" என்றான் நயினா; விஷயம் உண்மை; அதனை ருஜூப்படுத்த வேண்டிய அவசியமில்லை. கேட்டையா, அருணாசலம்? உன் கழுதை இந்த க்ஷணம் இங்குவர வேண்டும்; உன் மந்திரங்களைக் கட்டிவை; எங்களிடம் காட்டாதே"

என்று இங்ஙனம் சொல்லிக்கொண்டே, நயினா பாறு கழற்ற ஆரம்பித்தான். மற்றவர்களும் அங்ஙனமே செய்தார்கள்.

நியாயம் பேசுவதற்குத் தகுந்த நேரமன்றென்று தெரிந்து கொண்டான் அருணாசலம்-அவன் உடனே சொன்னதாவது:—

"சரி, என் கழுதை சந்திரனை விழுங்கி விட்டதல்லவா? நீங்கள் கழுதையைக் கொன்றால் சந்திரனும் இறந்து போகாதா? உங்களுக்கோ சந்திரன் வேண்டும். ஆகையால், நீங்கள் நினைத் திருக்கும் வண்ணம் செய்யாமல் என் இஷ்டப்படி விடுவீர்களா னால், நான் எனது ஆவியோடு கலந்து பேசி விவகாரங்களை ஒழுங்காக முடிப்பேன். ஆவிது என் கழுதை; அஃது என் சொற்படி நடக்கும்; அஃது என் சொல்லை மாத்திரந்தான் கேட்கும்; இன்னும் இரண்டு நாட்களில், நீங்கள் சந்திரனைக் காணாவிட்டால் அப் போது என்னையும், என் கழுதையையும் உங்களிஷ்டப்படி செய் யலாம்."

அருணாசலத்தின் வார்த்தைகள் குடியானவர்களின் வேகத் தைக் குறைத்தன. அடுக்குநயினா மற்றத் தோழர்களோடு ஆலோ சனை செய்தான். முடிவில் "நாங்கள் நீ சொன்னதை அங்கீகா ரம் செய்தோம். நீ உன் வார்த்தைப்பாட்டை மறந்துவிடாதே" என்று அருணாசலத்திடம் சொல்லிவிட்டு எல்லாரும் கலைந்து போனார்கள்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு, வானத்தி லிருந்து சில மழைத்துளிகள் தரைமீது விழுந்தன. "நல்லது" என்று நினைத்து, அருணாசலம் சந்தோஷங் கொண்டான்.

அங்ஙனமே வானத்தின் தன்மைமாறி 48-மணி நேரம் இடைவிடாமல் மழை பொழிந்தது. பிறகு மேல்காற்று கிளம்பி

மேகங்களைக் கலைத்துவிடவே, சந்திரன் வழக்கம்போல மிகவும் தாவள்யமாகப் பிரகாசித்தான்.

பாழூர் ஜனங்கள் மறுபடியும் அருணாசலத்தினிடம் செல்லவேயில்லை. ஆனால் அவர்களுக்கு அவனுடைய மந்திரத்தில் அதிக நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவன் விஷயத்தில் அச்சமும், மதிப்பும் உண்டாயின. அவனுடைய கழுதைக்கு முன்னைவிட அதிக சந்தோஷத்திற்கு இடமாயிற்று. ஒவ்வொருவனும் அதனுடைய சிநேகத்தை அடைய விரும்பி, அதற்குக் கொள், கிழங்கு, கீரை முதலியவற்றை ஏராளமாக வலியக்கொடுக்கத் தலைப்பட்டான். கோவில் மாட்டுக்குக் கடைத்தெருவில் என்ன பூஜை நடக்குமோ அந்தப்பூஜை பாழூரின் அபிஜுக்கு நடந்து வந்தது. மேலும் அந்த ஊரில் எல்லாரும் கையில் ஏதோ ஒன்று சாம்பல் நிறமாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்களே அதென்ன தெரியுமா? நமது அபிஜின் வால்மயிர்.

அபிஜின் அடர்த்தியான வால் மயிரைப்பிடுங்கி, நாக மணிக் கட்டில் கட்டிக் கொண்டால் பில்லி, சூனியம், திருஷ்டி தோஷம், பேய் முதலியவை அணுகாவாம். இந்தச் சங்கதி எங்கும் பரவிற்று. வெகு தூரத்திலிருந்து கூட ஜனங்கள் இந்த அருமையான ரக்ஷையை நாடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆகவே அபிஜு மிகவும் கொழுத்து, இறுமாந்திருந்தது. ஒருநாள் அருணாசலம் அதன் மீது அழுக்கு மூட்டைகளை ஏற்றினபோது, அது முறைத்துக் கொண்டு, கழுத்தை நீட்ட ஆரம்பித்தது. அப்போது அருணாசலம் “ஆஹா என்னையும் இவ்வூர் மூடர்களில் ஒருவனாக மதித்தனையோ? இவ்வளவு கர்வமும், கொழுப்புமா உனக்கு? என்னிடம் உன் ஜபம் சாயாது. இதோ பார்” என்று சொல்லி, உள்ளே சென்று உலக்கையை எடுத்தோடிவந்தான். அதைக் கண்டவுடனே கழுதையின் சரீரம் நடுங்க ஆரம்பித்தது. நீண்டசெவிகள் தொங்கிப்போயின. எந்த வால் மற்றவர்களுக்கு ரக்ஷையாக இருந்ததோ, அந்தவால் ஆசனத்தோடு இறுக ஒட்டிக்கொண்டது. இந்தக் கோலத்தோடு, இரக்கமான கண்களால் எஜமானனைப்பார்த்தது கழுதை. உடனே அருணாசலம் அதனை வெகு சுலபமாகத் துறைக்கு ஓட்டிக் கொண்டுபோனான்.

மனிதர்களின் தாரதம்மியத்தை நன்றாகக் கண்டுகொண்ட அபிஜு அன்று முதல் எஜமானிடத்தில் மிகவும் விசுவாசமாக

வும், இவ்வூர் ஜனங்களுக்கு நான் மேல், எனக்கு என் எஜமான் மேல் என்ற எண்ணத்தோடும் காலம் கழித்து வந்தது.

N. சுப்பிரமணிய அய்யர்,
புதுவை.

## Brain & its structure. Perception, Thought & Memory.

### (a) பிள்ளைகளின் மூளை.

எந்தப் பொருளினால் நாம் ஐம்புலன்களின் மூலமாய் உலகத்திலுள்ள சகல விஷயங்களையும் அறிகிறோமோ, எதனால் யோசிக்கிறோமோ அந்த வஸ்துவைப்பற்றிச் சற்று நமக்குத் தெரிந்திருப்பது நலம். இந்த வஸ்துதான் மூளை. எப்படி ஒரு தனவந்தன் வீட்டிலுள்ள பணமும், விலையுயர்ந்த நகைகளும் இரும்புப் பெட்டியில் பத்திரமாய் வைக்கப்பட்டிருக்குமோ அப்படியே நம்முடைய மூளையும் மண்டையில் கெட்டியான ஓடுகளாலாக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுடைய எல்லா அவயவங்களைக் காட்டிலும் இது மிக்க சிறந்ததானகையால் பணம் நகைகளைப்போல் பத்திரமாய்க் காப்பாற்றப்படுவது அவசியம். இதன் மேற்பாகம் மிருதுவாயும் சாம்பல் நிறமாயும், உருண்டையாயும் மடிப்பு மடிப்பாயு மிருக்கும். இதன் உட்பாகம் பேசாயிராமல் பல நரம்புகளின் சேர்க்கையினால் கெட்டியாயிருக்கும். இது பார்ப்பதற்கு ஒரு மாமிச பிண்டத்தைப் போலிருக்கும். ஆனால் இது சாதாரண மாமிசம் போன்றதல்ல. இதன் மூலமாகத் தான் நாம் எல்லா விஷயங்களையு மறிகிறோம். இது எவ்வளவுக்கு எவ்வளவு மேலானதாயிருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு இதை யுடையவன் புத்தியில் சிறந்தவனாயிருப்பான்.

மேலும் இந்தமூளையானது ஒவ்வொருவனுடைய ஜனனக்கிரமாநுசாரமாக தன் சந்ததியாரின் மனோ விசாலத்தை யடுத்துச் சில விசேஷங்களைப் பெற்றிருக்கிறது. நரியின் குட்டி நரியினத்தின் தந்திர புத்தியையும், புலியின் குட்டி தன்னினத்தின் கொடூர குணத்தையும், சிங்கத்தின் குட்டி தன்னினத்திற்கு இயல்பாயுடைய பெருந்தன்மையையும் மானின்குட்டி தன்னினத்திற்குச் சுபாவமாகிய பயத்தையும் இவற்றிற் குள்ளேயே வெவ்வேறு ஜாதிகள் தத்தமக்குத் தக்கவாறு புத்தி விசேஷங்களையும் ஜனன காலத்திலேயே பெறுகின்றன. இங்ஙனமே மனிதனுடைய மூளையும்

தன் சந்ததியாரின் மூளை விசாலத்திற்கு ஏற்றபடி சில சில விசேஷங்களைப் பெற்றிருக்கின்றது.

இதனாற்றான் ஒரு பிள்ளைக்கும் மற்ற பிள்ளைக்கும் சுபாவத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. உதாரணமாக ஒரு பிள்ளைக்குச் சித்திரம் எழுதுவதில் பிரியம். ஒரு பிள்ளைக்குப் பாட்டு பாடுவதில் ஆசை; வேறொரு பிள்ளைக்குக் கணிதத்தில் இச்சை. இங்ஙனம் பலவகைப்படும். இங்ஙனம் ஒவ்வொரு விசேஷத்தைப் பெற்ற ஒவ்வொருவரின் மூளையிலிருந்தும் பல சிறிய எலும்புகளாலாக்கப்பட்ட மணிக்கோவையைப் போன்ற முதுகெலும்பின் மத்தியில் இருக்கும் கால்வாயின் மூலமாகப் பல நாம்புக்கூட்டங்கள் இறங்கும். இந்நாம்புகள் தேகத்தின் பற்பல பாகங்களுக்குச் செல்லுகின்றன. இந்நாம்புகள் கண், காது மூக்கு, நாக்கு முதலிய இந்திரியங்களுக்கும் மூளைக்கும் சம்பந்தமாக விருக்கின்றன. இவ்விந்திரியங்களின் மூலமாக நாம் அறியும் ஒளி, நிறம், சப்தம், வாஸனை, பரிசம், உருசி முதலிய உணர்ச்சிகள் இந்நாம்புகளின் மூலமாய் நம்மூளைக்குச் சென்று அறிவிக்கின்றன. நெருப்பைத் தொட்டபோது அது (நெருப்பு) நம் கையைச் சுடுகிறது. இதனால் நெருப்பு சூடுடையதென்று அறிகிறோம். வெல்லத்தை வாயில் போட்டு ருசி பார்த்தபோது இனிய சுவையை யுணர்கின்றோம். இதனால் வெல்லம் இனிது என்ற ஞானம் நமக்கு வருகிறது. ஒரு எலுமிச்சம் பழத்தைக் கண்ணால் பார்க்கிறோம். அப்போது அது உருண்டை வடிவினதென்றும் மஞ்சள் நிறமுடையதென்றும் அறிகிறோம். இங்ஙனம் ஒவ்வொரு இந்திரியத்தாலும் அதனதற்குரிய விஷயங்களை யறிவதே அநுபவ ஞானமாம். இந்த அநுபவ ஞானமானது ஒவ்வொருவருடைய மூளையிலும் எண்ணங்களாக (Ideas) நிலைக்கின்றன. ஒருவன் ஒரு எலுமிச்சம் பழத்தைத் தன் இந்திரியங்களின் மூலமாய் அது உருண்டை வடிவமுடையதென்றும், மஞ்சள் நிறமானதென்றும் மிருதுவானதென்றும், புளிப்பாயிருக்கிறதென்றும் ஒருவித வாஸனையுடையதென்றும் அநுபவித்து அறிகிறான்.

அறிந்த சில நாளைக்குப்பிறகு அந்த எலுமிச்சம் பழத்தைப் பார்க்க நேர்ந்தால் அப்போது அவன் அதைக் கையில் தொடாவிட்டாலும் அது மிருதுவானதென்றும், முகராவிட்டாலும் அது ஒருவித வாஸனையுடையதென்றும், சுவைக்காவிட்டாலும் அது

புளிப்பான தென்றும் அவன் மனதில் எண்ணுகிறான். பிறகு அவன் வீட்டிற்குச் சென்று அந்தப் பழத்தின் தன்மைகளை யெல்லாம் நினைக்கிறான். அப்போது உருண்டை வடிவம் முதலியன அவனுக்கு ஞாபகம் வருகின்றது. இதற்குத் தான் ஞாபகசக்தி யென்று பெயர். ஒரு பொருளின் தன்மைகளோ அல்லது மற்ற விஷயங்களோ நன்றாய் ஞாபகத்தில் பதிய வேண்டுமானால் ஒவ்வொரு இந்திரியத்தாலும் அவ்விஷயங்களை யறியும்போது அவன் கவனித்திருப்பது அத்தியாவசியமாம். ஒவ்வொரு இந்திரியத்திற்குரிய விஷயத்தையும் அறியும்போது மனமும் இந்திரியமும் சேர்ந்து வேலை செய்வது தான் கவனித்தலென்றும் உற்றுப் பார்த்தல் என்றும் சொல்லப்படும். "மனமானது இந்திரியத்தோடு சேர்ந்து வேலை செய்வது" என்றால் ஒரு இந்திரியத்தின் மூலமாய் அதற்குரிய விஷயத்தை மூளைக்கு அறிவிக்கும் நரம்புகள் வேலை செய்து கொண்டிருந்தால் வேறொரு இந்திரியத்தின் மூலமாய் அதற்குரிய விஷயங்களை மூளைக்கு அறிவிக்கும் நரம்புகள் வேலை செய்யாது. உதாரணமாக, செவியினால் ஒரு சப்தத்தை யுற்றுக் கேட்டுக் கொண்டிருக்கும்போது கண்ணால் பார்த்த வடிவம், நிறம் முதலியவை மூளைக்கு எட்டா. இப்போது மூளையானது (மனம்) கண்ணிந்திரியத்தோடு ஒத்து வேலை செய்யாததால் அவன் கவனமாய்ப் பார்க்கவில்லையென்று சொல்லுகிறோம். கவனமாய்ப் பாராததால் பார்த்த வடிவம் நிறம் முதலியவை மனதில் நிலை பெற்றிரா.—ஆனால் அப்போது செவி யிந்திரியத்திலிருந்து போகும் நரம்புகள் வேலை செய்து கொண்டிருப்பதால் அவன் மனமானது செவியோடு ஒத்து வேலை செய்ததென்று சொல்லுகிறோம். இதனால் அவன் சப்தத்தை நன்றாய் அறிந்தான். ஆகவே விஷயங்களைச் சந்தேக விபரீதங்களின்றி அறிய உற்றுக் கவனித்தலே இன்றியமையாததென்று பெறப்பட்டது.

### (b) உற்றுப் பார்த்தல் (Observation)

ஒவ்வொரு இந்திரியத்தின் மூலமாயும் அததற் கேற்ற விஷயங்களை ஸ்தூலமா யறியாமல் ஸூக்ஷ்மமாயறிந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனித்து யாதொரு சந்தேகமும் உண்டாகாத வண்ணம் காரணத்துடன் அறிவதே உற்றுப் பார்த்தலெனப்படும். உதாரணமாக, ஒரு கிளியைப் பார்த்து அது பச்சை நிறமாயிருப்பதால் தன் சத்துருக்களாகிய வேடர்களின் கண்களுக்கு அகப்படாமல் தப்பித்துக் கொள்வதற்கு அநுகூலமாக

அது வசிக்கும் மரங்களின் பச்சை நிறத்தைப் போலவே அதற்கும் அந்நிறம் கடவுளால் கொடுக்கப்பட்டதென்றும், மூக்கு வளைந்திருப்பதால் கடினமான கொட்டைகளையும் உடைத்துத் தின்ன சௌகரியமாயிருக்கு மென்றும், அதன் கால்விரல்கள் முன்னே இரண்டும் பின்னே இரண்டு மிருப்பதால் மரக்கிளைகளை நன்றாய்ப் பிடித்துக் கொள்ளத் தகுதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றும் ஊகிக்கலாம். பூனையின் கால்கள் பஞ்சுப் பொதிகளைப் போன்று மிருதுவானவையா யிருப்பதால் பூனை தன் இரையைச் சுலபமாய்ச்சம்பாதிக்கத்தகுந்த சாதனமாயிருக்கின்றதென்றும், பாம்பின் பற்கள் உள் வளைவாயிருப்பதால் அவை ஆகாரத்தை மெல்லுவதற்கு உபயோகப் படாவிட்டாலும் அது ஆகாரத்தை (தவளை எலி முதலியவற்றை) முழுதாக விழுங்குகையில் அவை அதன் வாயிலிருந்து தப்பித்துப் போக முடியாமல் செய்வதில்மிக்க உபயோகமாயிருக்கின்றனவென்றும் அறியலாம்.

நன்றாய், உற்றுப் பார்ப்பதனால் இயற்கையிலுள்ள அநேக விநோதங்களும், கடவுளின் வல்லமையும், ஞானமும் நன்றாய்ப் புலப்படும். இதுவேயுமன்றி மரத்திலிருந்த அத்திப்பழம் கீழே விழுந்ததை யுற்றுநோக்கி, யோசித்ததினா லல்லவோ நியூடன் என்கிறவர் பூமிக்கு ஆகருஷண சக்தி யுண்டென்று கண்டு பிடித்தார்? "ஜேம்ஸ் வாட்" "ஸ்டீவன்ஸன்" என்பவர்களால் நீராவி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் உற்றுநோக்குதலாலேயே யல்லவா? ஆகவே கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட புத்தியை யுபயோகித்து சிருஷ்டியாகிய இயற்கைப் புத்தகத்தை உற்றுப் பார்த்தலின் மூலமாய் வாசித்து கடவுளின் அருமையான செய்கைகளையும் நம்மிடத்தில் அவருக்கிருக்கும் விசுவாசத்தையும் கிருபையையும் அறிந்து நம்முடைய அறிவை விர்த்திசெய்து கொள்ள வேண்டுவதவசியம். இங்ஙனமே நம்மிடங் கற்கும் சிறுவர்களிடத்திலும் உற்றுப்பார்க்குஞ் சக்தியை விர்த்திசெய்து அவர்களின் அறிவையும் விர்த்திசெய்தல் நம்முடைய கடமையே யல்லவா?

### (c) உற்றுப்பார்த்தலே சிறந்த உபாத்தியாயர்.

### (Observation, the great Instructor of Children.)

உபாத்தியாயர்களாகிய நாம் சிறு பிள்ளைகளிடத்தில் உற்றுப் பார்க்குஞ் சக்தியை வழக்கத்திற்குக் கொண்டுவந்து விர்த்திசெய்

தால் நாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது மிகவும் சுலபமே. நாம் ஒரு வழிகாட்டியைப்போ லிருந்து விஷயங்களைத் தங்களுக்குத் தாங்களே உற்றுப்பார்த்து யோசித்து அறியும்படி செய்கிறபோது உற்றுப்பார்த்தலே உபாத்தியாயராக வில்லையா? உற்றுப்பார்க்கும் வழக்கத்தை விர்த்திசெய்யாமல் “சொல்லிக் கொடுத்த படிப்பு கிளிப்பிள்ளைப் படிப்பைப்போலும், மணமற்ற புஷ்பம்போலும், அறிவு என்பது சற்றேனுமின்றி மூடத்தன்மையாயிருக்கும். மேலும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் கட்டிக்கொடுத்த சாதமும் எத்தனைநாளைக்குத் தாங்கும்” என்ற பழமொழிப்படி அவ்வித மூடப்படிப்பும் ஒரு நாளேனும் மனதில் நில்லாது. ஆகவே நாம் சிறுபிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது மிக்க கொஞ்சமாக விருந்தாலும், எப்படி வெண்ணெய் வைத்திருப்பவனுக்கு நெய்யுடைமை நியமமோ அப்படியே உற்றுப்பார்க்குஞ்சத்தியுடையவனுக்குப் புத்திஸூக்ஷ்மமும்மனோவிசாலமுமிருப்பது நியமமாதலால், இந்த வழக்கத்தை நாம் சிறுவர்களிடத்தில் விர்த்திசெய்வது நம்முடைய முதல் நோக்கமென்றறிவது அவசியமாம்.

(வரும்).

ந. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீச்வரன் பேட்டை.

## ஆகாதாரம்.

### வாயு.

வாயு ஜீவகோடிகளுக்கு ஜீவாதாரமாக விருக்கின்றது. ஆகாரமின்றி ஜீவகோடிகள் சிலகாலம் ஜீவித்திருக்கலாம்; ஆனால் வாயுவின்றி ஒரு நிமிஷநேரமேனும் ஜீவித்திருத்தல் கூடாதாம். இதனால் ஜீவகோடிகளின் ஜீவிதத்திற்கு வாய்வு அத்தியாவஸ்யகமாக வேண்டியிருக்கின்றது. ஜீவர்கள் பிறந்தவுடன் வாயுவை யுட்கொள்ளுவது தான் அவர்களது முதற் செய்கையாக விருக்கின்றது; ஜீவர்களிறக்குங் காலத்தில் வாயுவை விடுவது தான் அவர்களது கடைசிச் செய்கையாக விருக்கின்றது.

வாயுவு பூமி மட்டத்திலிருந்து ஆகாயத்தில் 45 மைல் உயரம் வரையில் வியாபித்திருக்கின்றது. வாயுவின் சலனத்திற்குக் காற்

றென்று கூறப்படுகின்றது. வாயுவில் இரண்டு அம்சங்கள் சேர்ந்திருக்கின்றன; ஒன்றற்கு ஆக்ஸிஜன் (Oxygen) பிராணவாயுவென்றும், மற்றொன்றற்கு நைட்ரோஜன் (Nitrogen) உப்பு வாயுவென்றும் பெயராம். பிராண வாயுவு ஐந்தில் ஒருபாகமும், உப்பு வாயு ஐந்தில் நான்குபாகமுமிருக்கின்றன. பிராண வாயு பிராணிகள் ஜீவிப்பதற்கும், நெருப்பு எரிவதற்கும் ஆதாரமாயிருக்கின்றது. இந்தப் பிராணவாயுவில்லாத விடத்தில் பிராணிகள் இறந்துபோவதும், விளக்கு அணைந்துபோவதும் உலகாநுபவமாம். ஆனால் வாயுவில் உப்பு வாயு கலந்திராது, பிராண வாயுவே முற்றுமிருக்குமாயின் உலகம் நிலைபெறுவதில்லாதுபோம்; எங்கும் நெருப்பு மயமாய்விடும். அதனாற்றான் காருண்யமுள்ள கடவுள் ஜீவகோடிகளின் போகாநுபவத்திற்கு வேண்டிய அளவாக அதனை வாயுவில் ஐந்தில் ஒருபாகமாக அமைத்திருக்கின்றனர்.

விஷ வாயுக்கள் பல ஆகாயத்தில் வியாபித்திருக்கின்றன. அவற்றின் கரியமில வாயுவு (கார்பானிக் ஆஸிட் காஸ் Carbonic-acid gas) என்றொரு வாயு விருக்கின்றது. இது வாயுவில் பத்தாயிரம் பங்கில் நான்கு பங்குளது; பிராணிகள் சுவாசத்தினால் வாயுவை யுட்கொள்ளும்போது அதிலுள்ள பிராண வாயுவு இரத்தத்தைச் சுத்தஞ் செய்து தேகத்திலுள்ள அசுத்த பதார்த்தங்களை எரித்து விடுகின்றது. அதனாலுண்டாகும் வாயுவே கரியமில வாயுவென்று கூறப்படுகின்றது. ஒரு புருஷன் ஒரு மணி நேரத்தில் 636 கிரெயின் அல்லது 3½ ரூபாய் எடையுள்ள கரியமில வாயுவைச் சுவாசத்தினா லுண்டாக்குகின்றான். விளக்கு முதலியவற்றாலும், தீ எரிவதனாலும், புல் பூண்டுகள், பிராணிகளின் பிரேதங்கள் அழுகிப்போவதனாலும் கரி அமில வாய்வு உண்டாகின்றது. பிராண வாய்வு பிராணிகள் ஜீவித்திருப்பதற்கும், தீ எரிவதற்கும் ஆதாரமாயிருக்கின்றது; கரி அமில வாய்வு பிராணிகளுக்கு ஹானி உண்டாக்குவதற்கும், நெருப்பை அணைப்பதற்கும் யோக்யமுடையதா யிருக்கின்றது. இந்தக் கரி அமில வாயுவை ஒரு பாத்திரத்தில் சேகரஞ் செய்து வைத்து, அதில் ஒரு ஜெந்துவை விட்டால், அஃது உடனே இறந்து விடும். ஆழமான கிணறுகளில் இந்த வாய்வு அதிகமாக விருப்பதுண்டு; அத்தகைய கிணறுகளில் இறங்குகின்றவர்கள்

திடீரென்று இறந்து விடுவதை நாம் காண்கின்றோம். புதையல்களைத் தோண்டுகின்றவர்கள் திடீரென்று இறந்துவிடுகின்றார்களென்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இதற்குக்காரணம் பேய் பூதங்களல்ல; புதையலிலிருந்துண்டான கரியமில வாயுவேயாம். இக்காரணத்தை யறியாத மூடர்கள் புதையலில் பூதங்களிருக்கின்றனவென்று கருதி அவற்றிற்குப் பலியிடுகின்றார்கள். ஜனநெருக்கமான விடத்திலும், விளக்குகள் நிறைந்த ஸ்தலத்திலும் கரியமில வாய்வு அதிகமாக வுண்டாகின்றது; அதனாற்றான் அவ்விடங்களிலுள்ளவர்கள் தலைநோவும், ஆயாசமு முடையவர்களாகி அவ்விடங்களை விட்டு வெளியேபோயிருக்க விடக்கூடும்போலப் பிரியப்படுகின்றார்கள். இவ்வாற்றால் கரியமில வாய்வு விஷமான தென்றேற்படுகின்றது. இக்கரியமில வாய்வு நிறைந்த ஆகாயத்தினால் பிராணிகட்குக் கெடுதியுண்டாகுமே யென்று பலர் நினைத்தல்கூடும்; ஆனால் இந்தக் கரியமில வாய்வு புல், பூண்டு, செடி, மர முதலிய தாவரங்களுக்கு ஜீவாதாரமாக விருக்கின்றது. அதனால் அவை கரியமில வாயுவை யுட்கொண்டு பிராண வாயுவை வெளியாக்குகின்றன. பிராணிகள் ஆகாயத்திலுள்ள பிராண வாயுவை யுட்கொண்டு தாவரங்களுக்கு ஜீவாதாரமாகிய கரியமில வாயுவை வெளியாக்குகின்றன; தாவரங்கள் கரியமில வாயுவை யுட்கொண்டு பிராணிகளுக்கு ஜீவாதாரமாகிய பிராணவாயுவை வெளியாக்குகின்றன. இங்ஙனம் பிராணிகளும் தாவரங்களும் பரஸ்பர சகாயமுடையனவா யிருக்கின்றன. விருக்ஷங்கள் பகலில் பிராண வாயுவையும், இரவில் கரியமில வாயுவையும் வெளியாக்குகின்றமையின், பிராணிகள் விருக்ஷங்களின் கீழ் இரவில் அதிக நேரமிருத்தல் கூடாதாம்; அங்ஙனமிருப்பவர்க்குச் சுகவீனமும், சோர்வுமுண்டாகின்றன; பகற்காலங்களில் விருக்ஷங்களின் கீழிருப்பவர்க்கு சுகமும் உற்சாகமு முண்டாகின்றன.

கரியமில வாயுவே யன்றி ஆகாயத்தில் வேறு விதமான விஷக்காற்றுக்களும் வியாபித்திருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை கெந்தக ஜலவாய்வு (Sulphuretted Hydrogen gas), நவாசாரவாய்வு (Amonia gas) என்பனவாம். கெந்தக ஜலவாய்வு ஜலதாரை முதலிய அசுத்தமுள்ள விடங்களில் உற்பத்தியாவது; இதுமிகவும் விஷமுள்ளது. சென்னையில் மூடப்பட்டிருக்

கும் சாக்கடைகளைச் சுத்தஞ்செய்யச் சென்ற கூலியாட்களுள் இருவர் மயக்கமடைந்து இறந்துவிட்டனர். இந்த விஷக்காற்றையே வீசிக்கொண்டிருக்கும் சாக்கடைகளினருகே வாசஞ்செய்பவர்கள் மிகவும் சுகவீனமுள்ளவர்களாக விருப்பதை நாம் பார்க்கின்றோம்; அவர்கள் தலைவலி, மயக்கம், வாந்தி, பசியின்மை முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். அதனால் சாக்கடைகளினருகே வாசஞ் செய்வது சுகவீனத்திற்கேதுவாமென்பதனை ஜனங்கள் உணர்தல் வேண்டும். துர்க்கந்தத்தை வீசும் இந்த விஷவாய்வு நாம் பானஞ்செய்யும் ஜலத்தில் சேர்ந்துவிடுமாயின், அந்த ஜலத்தைக் குடிப்பவர்க்கு இரத்தக்கட்டி, வயிற்றுப்போக்கு, சீதபேதி முதலியவியாதிகள் உண்டாகும். அதனாற்றான் ஜலத்தை நன்றாகக் காய்ச்சி,வடிகட்டிய பின்னரே பானஞ்செய்தல் சுகாதாரத்திற்கேதுவாமென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகின்றனர். பிராணிகளின் மூத்திரமுதலிய கழிவுப் பதார்த்தங்களிலிருந்துண்டாகும் வாய்வு நவாசார வாயுவாம். இவற்றைப்போன்ற பலவகைப்பட்ட விஷவாயுக்கள் ஆகாயத்தில் வியாபித்திருக்கின்றன. (வரும்).

## கிரீக்தேசத்துப் பீமசேனன் கதைகள்.

### பீமசேனனும் பாம்புகளும்.

உலகத்தில் ஆதிகாலத்தில் அதிக நாகரிகம் பெற்ற தேசம் கிரீஸ் தேசமாம். அந்தத் தேசத்தில் அநேக வல்லமைசாலிகள் இருந்தார்கள். அவர்களுள் அதிக கீர்த்திபெற்றவன் பீமசேனன் என்பவன். இவனைப்பற்றி அநேக கதைகள் சொல்லுகிறார்கள். அவற்றுள் சில இப்போது சொல்லப்படும்.

கிரீஸ் தேசத்தார்க்கும், இந்துக்களுக்கு இருப்பதுபோல, அநேக தேவதைகள் உண்டு. அவர்களுள் ஒரு தேவனது புத்திரன் பீமசேனன். இவன் அந்தத் தேவனது புத்திரர்களிலே மிக்க பலசாலி, தைரியவான், பெருத்த சரீரமுடையவன். இவன் பிறந்து சில மாதத்திற்குள்ளாகவே, அதாவது இளங்குழந்தையாக இருக்கும்போதே தனது தைரியத்தைக் காட்டினன். இவனை இவன் தாயார் இவன் தகப்பனது கேடயத்தில் வளர்த்தித் தூங்கச்செய்வது வழக்கம். அதுபோலவே ஒருநாள் இவன்

தாயார் இவனை அந்தத் தொட்டிலில் வளர்த்தித் தூங்கவைத்தாள். எல்லாச் சந்தடியும் அடங்கிவிட்டது; இவனும் தூங்கிவிட்டான்; அப்போது இரண்டு பெரிய பாம்புகள் அந்த அறைக்குள் மெதுவாகப்போய் அந்தக் கேடயத்தில் நுழைந்தன. பிறகு அதில் தூங்கும் குழந்தையைச் சுற்றிப் பின்னிக்கொண்டன; தலைகளையும் தூக்கி இக்குழந்தையைக் கடிக்கவும் ஆரம்பித்தன.

அப்பொழுது குழந்தை விழித்துக்கொண்டது; பாம்பைப் பார்த்துப் பயப்படவில்லை. ஆனால் தொட்டிலில் மெல்ல எழுந்து நின்றுகொண்டு இரண்டு பாம்புகளையும் இரண்டு கைகளால் சீக்கிரமாகப் பிடித்தது; பிறகு அவற்றை நன்றாகப் பலங்கொண்டு நசுக்கினது. இந்தப் பாம்புகள் அக்குழந்தையைச் செவ்வனே பின்னிக்கொண்டு தரையை அடித்தன. இந்தச் சத்தத்தைக் கேட்ட அவனது தாயார் அங்கே ஓடிவந்தாள். அங்கிருந்த குழந்தையையும் பாம்புகளையும் பார்த்துப்பயந்து துணைதேடுவதற்காக வெளியே ஓடினாள். மறுபடியும் உள்ளேவந்து பார்க்கத் தன்னுடைய குழந்தை பொம்மைகளோடு விளையாடுவதுபோல் அந்த இரண்டு பெரும் பாம்புகளோடு விளையாடிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் இரண்டு பாம்புகளும் இறந்துவிட்டன. இதையறிந்த தாயார் பாம்புகளைக் கையிலிருந்து விடுவிக்க முயன்றபோது இந்தப் பாம்புகளைத் தன்னுடைய குழந்தையின் சிறுகைகள் மிகக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு இருந்தனவென்றும், அதனால் அப்பாம்புகள் இறந்துபோய் விட்டன என்றும் கண்டு ஆச்சரியமடைந்தாள்.

மேலும் பின்னால் நடக்கப்போகிற காரியங்களை முன்னமே சொல்லுகிறதாக அந்தத் தேசத்தார் எண்ணியிருந்த ஒரு குருட்டுக் கிழவனிடம் குழந்தையின் தாயார் அடுத்த நாள் சென்றாள்; ஒரு வருடம்கூட ஆகாத ஒரு குழந்தை இரண்டு பெரிய பாம்புகளைக் கொன்றுவிட்டது; இதன் அர்த்தம் என்ன என்று எனக்குச் சொல்லவேண்டுமென்று அக்கிழவனைக் கேட்டாள்.

உலகத்தில் முற்காலத்தில் இருந்த எல்லாரைப் பார்க்கிலும் உன்னுடைய குழந்தை, பீமசேனன், மிக்க வல்லவனாவான் என்றும், அவன் வினோத காரியங்கள் அநேகம் செய்வானென்றும், முடிவில் கிரீக் தேசத்து மலையுச்சியில் தேவதைகளோடு வசிப்பான் என்றும் அந்தப் புத்திமான் சொன்னான்.

இந்தக் குழந்தை வளர்ந்து வந்து கொண்டிருக்கும் போது நின்றுகொண்டே தனது தேரை ஓட்டவும், பலமுள்ள இரும்பால் செய்த உடுப்புகளைப்போட்டுக் கொண்டு சண்டை செய்யவும், குஸ்தி பிடிக்கவும், வில்லில் அம்பைவைத்துத் திற மாய் எய்யவும், நன்றாகப் பாடவும், விளையாடவும் கற்றுக்கொண் டான்.

இம்மாதிரியாக அவன் பதினெட்டுவயது அடையும் வரைக் கும் வலுமையிலும் பலத்திலும் சிறந்தியாவதில் காலத்தைக் கழித்துவந்தான். ஆனால் அவன் சாந்தமும் பட்சமும் உடைய வனாக இருந்து, தன்னைப் போன்ற பலமில்லாதவர்களுக்கு ஆவ லோடு எப்பொழுதும் உதவி செய்துவந்தான்.

வ. ஆறுமுகசெட்டியார்,

முத்தியாலுபேட்டை, சென்னை.

## புல்லறிவாண்மை.

ஆழமறியாமல் ஜலத்தில் காலை விடுகிறவன் தனக்குத்தானே யமனாவானென்பதற்கு அவனது புல்லறிவாண்மையே காரணமாக விருக்கின்றது.

எதையும் விபரீதமாக நினைத்துத் திகைக்கின்றவன் மூடரில் தலைமையானவனென்று கருதப்படுவான்.

நன்றி யின்னதெனத் தெரிந்துகொள்ள மாட்டாதவன் மனி தனாக வுருக்கொண்டிருக்கினும் ஸூத்திரக் கயிற்றால் அசைவுறு மரப் பாவையின் தன்மை யுடையவனென் றெண்ணப்படுவான்.

மோக்ஷத்திற்குறுதியைத் தரும் நல்லவசனங்களை விரும்பிக் கேளாதவர்கட்கு வலுவிற்போய் அவைகளைவெளியிற் சொல்ல விரும்புகின்றவன் ஞானியாக விருந்தாலும் பேதையிற் பேதை யெனப்படுவான்.

எண்ணிக்கையில்லாமல் வைக்கப்படுகின்ற த்ரவ்யம் குறைவை யடையுமென்பதற்கு சந்தேகம் வேண்டுவதில்லை; எப்படியெ னில், அறிவில்லாதவன் கைப்பொருள் அவனையறியாமலே அழிந்து போமென்பது போலேதான்.

அறிவென்னும் தீபமில்லாதவர்கள் வாழுமிடம் அந்தகாரமான இருள்மூடிய காட்டுக்கொப்பாகும்; ஆதலாலவர்களைக்கொண்டு சேவகஞ் செய்வதில் ஒரு பயனுமில்லாமற் போவதுமன்றிப் பற்பல விக்கட்டுகளும் நேரிடும்.

தம்மைத்தாமே புகழ்கின்றவர்கள் வித்வான்களாக விருப்பினும் அவிவேகிகளென விகழப்படுவார்கள்.

மதம்பொழிகின்ற யானை முன்னிட்டவர்களைக் கொல்லுமென்றறிந்திருந்தும் அதற்கு முன்னேறுகிறவன் பலாட்டியனாக விருக்கினு முயிரிழக்கும்படி நேரிடுமென்றறியாதவன் அறிவிலானாவான்.

ஆதலால் அறிவின்மையானது எல்லா நன்மைகளுக்கும் பங்கத்தை யுண்டாக்குவதால் அந்த மௌட்யத்திற் கிடங்கொடாது நடத்தலே நன்மார்க்கத்திற்கோர் ஏணியாக விருக்கும்.

---

## நட்பு.

அன்பை விருத்திசெய்கின்ற நட்பாளரை யெக்காலத்துங் கைவிடாது நேசித்திருப்பதே ஸ்நேஹத்திற்கழகு.

அன்புடன் ஸ்நேஹிப்பவர்களை யெப்பொழுதுங் கைவிடாமல் அவர்கள் விருத்தியாகும்படிக்குத் தன்னாற்கூடிய வுதவிசெய்து புகழடைவதே பெருமையாம்.

நெடுங்காலமாய்ப் பழகிவருந் தொடர்ச்சியையுடைய நல்லோர்களை நன்குமதித்துக் காக்கவேண்டும்.

சுற்றத்தார் மகிழ்ச்சியடையும்படி அவர்களைத் தழுவி வாழ்தலால் அவர்கள் செய்யுமுரிமைகொண்டு பெருமையடையலாகும்.

இனிய செய்கையுடைய நல்ல விவேகிகளின் நட்பைக்கொண்டு அவர்களோடு கூடிவாழ்வதைவிடத் தர்மம் வேறொன்றில்லை.

நட்பின் முறைமையில் “நீரும்பாலும்போல” வென வோர் உவமை யுண்டு; எப்படியெனில், பாலானது காய்ச்சப்படும்போது தண்ணீரானது தான் ப்ரவேசித்து அக்காய்ச்சல் வருத்தத்தை மேற்கொண்டு மித்திரனைக்காக்க விரும்பிச் சுண்டிப்போகின்றது; அதைக்கண்டு பாலானது பொங்கி நெருப்பில் வீழ்ந்தெரிந்து போக முயல்கின்றது; அதைக்கண்டு பொறுக்காமற்றண்ணீர் மறுபடி

கெல்லிருந்தும் பாலை நெருப்பில் விழவொட்டாமல் காக்கின்றது. இதுவே "க்ஷீரோதக ந்யாயம்" எனப்படும். பால் காய்ச்சப் படும்போது தண்ணீர் கலக்கப்படுவதும், அது சுண்டினவுடனே பால் பொங்குவதும், பின்னர்த் தண்ணீர் கலக்கப்படுமாயின் அது பொங்காமலடங்குவதுந்தான்.

நீசரோடு கூடி அபமார்க்கங்களை யநுஸரித்துப் பாபத் திற்கு ஹேதுவான காரியங்களைச் செய்கிறவன் நல்ல குலத்திற் பிறந்தவனாக விருந்தாலும் அவிவேகியெனப்பெயர் பெறுவதுமல் லாமல் குலஹீநனென்றும் பெயர்பெறுவான்; ஆதலால் மேன்மக்க ளோடு நட்புச் செய்யவேண்டும்.

செல்வம் வந்த காலத்திலுஞ் ஸ்நேஹத்தை மறவாமலதிக மான அன்பைச்செலுத்தித் தகுந்தவுதவி செய்கின்றவர்களே ஸ்நே ஹர்க்குத் தகுமையானவர்களாக வெண்ணவேண்டும்.

சுற்றத்தாரை விட்டுநீங்கித் தாம் விரும்பியவைகளைத் தர்மனெ றியின்படிச்செய்து நடக்கின்ற அறிஞர்களோ டுறவு செய்யலா காது; அதனால் நிந்தைக்கேதுவதுமன்றிக் கீர்த்திக்குங் கேடுமுறும்.

தம்மிடத்தில் யதார்த்தமாக நம்பிக்கைவைத்திருக்கின்ற ஸ்நே ஹிதரிடத்துப் பொய்சொல்ல வொருபோதும் விருப்பங்கொள்ள லாகாது; அப்படிவிரும்பினால் வஞ்சகனென்கிற பெயருண்டாவ தோடு ஸ்நேஹபங்கமும் நேரிடும்.

உரிமையாக நினைத்துச் சொல்லப்படும் யதார்த்தத்தைப் பொய்மையாக வெண்ணி மெய்யான ஸ்நேஹனை விரோதிக்கின்ற வன் புத்தி சாலியல்ல னென்பதற்கு ஸந்தேஹமில்லை. ஏனெ னின், அதனால் அவனடையவேண்டிய எல்லாப்பயன்களையு மிழ ந்து விடுவா னென்பதனாலேதான்.

விவேக மில்லாதவனுடைய நட்பைக்காட்டிலும் விவேகியி னுடைய பகைமையால் பயனுண்டென்று பெரியோர் கூறியதற்குப் பொருளென்ன வெனில், புத்திமான்களுடைய ஸ்நேஹத்தை விரும்பித் தேடவேண்டு மென்பதுதான்.

மெய்யான நட்பாளருடைய வொருமை வியோக முதலான காரணங்களாற் கெடமாட்டாது; எப்படியெனின், சந்த்ரன் மேகத் தினாற் சூழப்பட்டு வெகுதூரத்திலிருந்தாலும் ஆம்பல்களை மலர்ப் பித்து வாஸிக்கும்படிச் செய்யவில்லையோ ?

அதிகஸ்நேஹத்தினால் அவிவேகிகள் ஸ்நேஹருடைய பெருமையையுங் குணங்களையுமறியாமற் போகிறதுமல்லாமல் அவர்களை யலக்ஷ்யஞ்செய்கிறார்கள்; அதெப்படியெனின் சந்தன விருக்ஷங்கள் அதிகமாயிருக்குங் காட்டிற் குடியிருக்கின்ற மூடர்கள் அதை யெரிகரும்பாக வழங்குந் தன்மைபோலே தான்.

ஸம்பத்துண்டானால் ஸ்நேஹர்கள் அதிகமாய்க்கூடுவார்கள்; ஆனால் அவர்கள் மெய்யான ஸ்நேஹிதரோ அல்லவோவென்று அறிவதற்கு, தரித்ரம் உரை கல்லாயிருக்கும்.

ஆதலால் மேன்மை பொருந்தியவர்களுடைய நட்புக்கிடங்கொடா திருப்பது வறுமையிலுங் கொடியதென்றுணரவேண்டும்.

## பக்தி யோகம்.

அவர் சர்வப் பிரபஞ்சத்தின் ஆத்மாவாம்; அவர் மரணமற்றவர்; அவர்க்கே பரணசக்தி; அவர் சர்வஞ்ஞர்; சர்வவியாபி; ஜகத்தை ரட்சிக்குங் கர்த்தர்; ஜகத்திற்கு நித்தியனாகிய கடவுள்; இந்த ஜகத்தை நிரந்தரமாகத் தரிப்பதற்கு வேறொருவரும் சக்தரன்றாம். அவர் முதலில் பிரஹ்மாவைச் சிருஷ்டித்தனர்; அந்தப் பிரஹ்மாவிற்கு வேதத்தை உபதேசித்தனர்; முமுட்சுவாகிய நான் ஆத்ம ஞானத்தைப் பிரகாசிப்பிக்கவும், அந்தக் கடவுளைச் சரணடைகின்றேன். (சுவேதாசுவதர உபநிஷத்- VI-17-18).

### 1-பக்தியின் லட்சணம்.

பக்தியோகமென்பது ஈசுவர சாட்சாத்காரத்திற்குரிய உண்மையான ஒரு மார்க்கமாம். இந்த மார்க்கத்திற்கு ஆரம்பத்திலும், மத்தியிலும், முடிவிலும் பிரேமமே ஆதாரமாம். ஒருக்ஷணநேரம் ஈசுவரனிடத்துள்ள அதிப்பிரேமத்தினால், அல்லது அதிபக்தியினால், அல்லது அதி சிநேகத்தினால் நமக்கு முக்தி யுண்டாகின்றது. நாரதமகரிஷியின் பக்தி சூத்திரங்களுள் பக்தி யென்பது ஈசுவரனிடத்திலுள்ள அதிப்பிரேமம்" எனக்கூறி யிருக்கின்றார். "மனிதன் அதனை யடையும்பொருட்டே அவன் சகலத்தையும் நேசிக்கின்றான்; எதையும் வெறுப்பதில்லை. அவன் நித்திய திருப்தனுமாம்". "ஆனால் இந்த அதி சிநேகம் லௌகிகமாகிய எதனையும் அடைவின்பொருட்டும் உபயோகப்படுத்தப்படக்கூடாததாம்"

ஏனெனின், இச்சை யெதுபரியந்த மிருக்கின்றதோ அது பரியந்தம் இந்த அதி சிநேகம் அடையப்படுவதன்றும். "பக்தி கர்மத்தைவிட மேன்மையாம்; யோகத்தைவிடவும் மேன்மையாம்; ஏனெனின், இவை ஓர் உத்கிருஷ்டகாரியத்திற்குச் சாதனங்களாக மாத்திர மிருக்கின்றன. ஆனால் பக்திக்கு பக்தியே சாதனமாயும், சாத்தியமாயும், பலமாயு மிருக்கின்றது."

பக்தி நமது மகரிஷிகட்கு எப்போதும் பிரசங்கத்திற்குரிய ஒரு விஷயமாம். பக்தியென்னும் விஷயத்தைப்பற்றிச் சாஸ்திரரீதியாக எழுதியிருக்கும் சாண்டில்யர், நாரதர் முதலிய மகரிஷிகளைத்தவிர ஞானமார்க்கத்தைப் பிரதிபாதிப்பவராகிய வேதாந்த சூத்திரபாஷிய கர்த்தாக்களும் அதனை மிகச் சிலாகித்திருக்கின்றனர்.

பக்திக்கும் ஞானத்திற்கும் சாதாரணமாக நினைத்துவருவது போல ஒன்றற்கொன்று வித்தியாசமின்றாம். அவற்றின் கதி ஒரே ஸ்தானத்திற்குத் தானென்றும், முடிவிலிவ்விரண்டும் ஒன்றாகச் சேர்கின்றனவென்றும் முன்னதத்திலவும் இனிவருந்தே மேற்பிரதிபாதிக்கப்படும் சந்ததிகளால் நாம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறே ராஜயோகமும் முக்தியடையும்பொருட்டுப் பழகப்பட்டால் முடிவில் முற்கூறிய எல்லைக்குத்தான் அது நம்மைச் செலுத்துகின்றது.

பக்தியோகம் மோட்ச அடைவிற்கு மிகச் சுலபமும், இயல்பாகவுமுள்ள ஒரு மார்க்கமாம்; இதுதான் பக்தியோகத்திற்குரிய பெரிய நன்மையாம். ஆனால் பக்தியின் தொடக்கத்தில் அதற்கு இங்ஙனம் ஒரு தோஷமுண்டு; அது கிரமத்தினால் பிராகிருத பக்தியாய் முடிவில் பயங்கரமாகிய மகாமூட விசுவாசமாகப்பரிணமிக்கின்றது. இதுதான் அதற்குள்ள பெரிய தோஷமாம். இந்து மதத்திலும், மகம்மது மதத்திலும், கிறிஸ்தவமதத்திலும் காணப்படும் எண்ணிறந்த மதப்பற்றுடைய் மகாமூடர்கள் முற்கூறியவாறு சொகித்த பக்தியினின்று வெளிப்பட்டவராம். ஓர் இஷ்டபதார்த்தத்தின்கண் நிஷ்டை வைத்திருக்கிறான் அதன்கண் பரமார்த்தமாகிய சிநேகம் உண்டாம். ஒருகால் பலவிடங்களிலும் அஃது ஏனைய பதார்த்தங்களை இகழ்வதற்கும் காரணமாகவிருக்கின்றது. எல்லாத் தேசங்களிலும், எல்லாமதங்களிலுமுள்ள அற்பமதியினர்க்கும், மூடர்க்கும் தங்களது சொந்தமதத்

றை நேசிக்க ஒருமார்க்கமே யிருக்கின்றது; ஏனைய மதங்களிடத்
தும், மதஸ்தர்களிடத்தும் மாருத வைரத்தைக் காட்டுகின்றனர்.
சுவமதத்தையும், அதிற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கும் கடவுளை
யும் அதிபக்தியுடன் நம்பும் ஒரு புருஷன் மற்றொரு மதத்தை
யோ மற்றொரு சித்தாந்தத்தையோ பார்க்கும்போது மகாமூர்க்க
னும், பயங்கரனும், கேவலம் பித்தம் பிடித்தவனுமாய் வெறுப்பான
வனுமாவதற்குரியகாரணம் முற்கூறியதேயாம். இவ்வகைப்பக்தி
ஒருநாய்க்குச் சகஜமாகவுள்ள யஜமான பக்தி போலாம்; நாய்
தனது யஜமானனுடைய சொத்தை அந்நியர்கள் அபகரியாது பாது
காக்கின்றது; அன்றியும் சிலகாரியங்களில் நாய்க்கு மனிதனைவிட
அதிக புத்தியிருப்பதாகவும் நினைத்தல் வேண்டும்; ஏனெனின்
தனது யஜமானன் எந்த வேஷத்துடன் வந்தபோதிலும் அவர்
தனது சத்துருவாமென்று அஃது ஒருகாலும் மாருக நினைப்ப
தின்று. இத்தகைய பிராந்தியால் இவ்வகை மூடர்கள் தங்களிடத்
துள்ள அற்ப விவேகத்தைக்கூட நாசஞ்செய்கின்றனர். சுயநலத்
தின் பிரீதியால் மற்றொருவன் கூறுவது யாதென்று கேட்கவும்
கூட அவர்கட்குப் பொறுமையின்று; சரியோ, தவறோ எதா
யிருந்தபோதிலும் கூறுபவன் யாவனென்பது மாத்திரம் மதிப்பிலே
ண்டும். தனது பக்ஷத்தைச் சார்ந்தவர்களிடத்து அன்பையும், நற்
குணமும், சத்தியமும், இனேகமும் பாராட்டும் ஒருவனே அந்
நியர்களிடம் துக்கமேறுதுவாகிய சேஷ்டைகளைச் செய்யப்
பின் வாங்குவதில்லை.

பக்தியின் ஆரம்பகாலமாகிய கெள்ணி என்னும் அவஸ்தை
யில் மாத்திரந்தான் இந்தத் தோஷத்தைப்பற்றிப் பயப்படவேண்
டும். இவ்வவஸ்தையை விட்டுப் பரபக்தியை யடைந்தபின் முற்
கூறிய பயங்கரமாகிய மூடத்தன்மையைப்பற்றி நினைப்பதற்கின்
றும்; ஏனெனின் அத்தகைய உத்கிருஷ்ட பக்தன் பரமாத்மா
வோடு மிகச் சமீபித்தவனும்; அவனுக்கு ஏனைய உயிர்களிடத்து
யாதொரு வைரமும் தோற்றுவதின்றும்.

ஞானம், பக்தி, யோகம் என்னும் மூன்றும் ஒன்றாக எந்தப்
புத்தியில் மிக ஒற்றுமையாக விருக்கின்றனவோ, அதுவே மகா
உத்தமமாம். ஆனால் இவ்வாறு இந்த ஜன்மத்தில் எல்லோரும்
அடைவதற்குரித் தன்றாம். ஒரு பட்சிக்குப் பறப்பதற்கு மூன்று
சாதனங்கள் வேண்டும்; இரண்டு சிறகும், வழிதிருப்புவதற்கு

ஒருவாறுமாக். நமது அந்தக்கரணமாகின்ற பட்சிக்கு ஞானம் ஒரு சிறகும் பக்திமற்றொரு சிறகுமாம்; யோகம் வாலின் ஸ்தானத்தில் மத்தியஸ்தமா (சமப்படுத்துவதா) யிருக்கின்றது. இம் மூன்று மார்க்கங்களையும் ஒன்றாகப் பழக முடியாது; பக்தி மார்க்கத்தை மாத்திரம் அநுஷ்டிக்கத்தகுந்தோர் ஒரு காரியத்தை ஞாபகப்படுத்துதல் வேண்டும். நித்திய நைமித்திகக் கர்மங்கள் ஆருருட்சுவின் நிலையில் அத்தியாவசியகங்களாமாயினும், ஆரூடாவஸ்தையில் பரமாத்மாவினிடத்து அதிபக்தியுடனிருக்கும்போது அவற்றால் பாதுபயமின்றாம். அவை பராபக்திக்குச் சாதனங்கள் மாத்திரமேயாம்.

பக்திமார்க்கத்தை உபதேசிக்கும் ஆசாரியமார்களும் பரஸ்பரம் சிறிது அபிப்பிராய பேதமுடையவர்களாம். ஞானிகள் பக்தியை மோட்சசாதன மாத்திரமாக நினைக்கின்றனர்; ஆனால் பக்தர்கள் அதனைச் சாதனமும், சாத்தியமுமாக நினைக்கின்றனர். இந்தப்பேதம் மிக வித்தியாசமுடைய தன்றென்பது எனது அபிப்பிராயம். பக்தி சாதனமாக விருக்கும்போது அது தாழ்ந்தபடியிலுள்ள (கௌணி) பக்தியென்பது பொருளாம். ஆனால் ஆரூடாவஸ்தையிலுள்ள பராபக்தியும், இவ்வாரம்பாவஸ்தையிலுள்ள கௌணிபக்தியும் பிரிக்கப்படத்தக்க நிலையிலன்றாம். ஞானியும், பக்தனும் அவரவர்களுக்குரிய பிரத்தியேக மார்க்கத்திற்குப் பிரதான்யத்தைக் கற்பிக்கின்றனர்; ஆனால் பூரணபக்தியுண்டானதோடு பரமார்த்தஞானம் அவஸ்யம் உண்டாவதா மென்றும், அங்ஙனமே பூர்ணஞானமும் பரமார்த்தபக்தியும் பரஸ்பரம் ஒன்றுபட்டிருக்கின்றனவென்றும், அவற்றைப் பிரித்தல் அசாத்தியமா மென்றும் அவர் நினைப்பதின்றாம்.

இவ்விரண்டையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இனி இவ் விஷயத்தைப்பற்றி வேதாந்த பாஷ்யகர்த்தாக்கள் கூறுவது யாதென்றறிய நாம் முயற்சிசெய்வோம்.

"ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்"

" என்னும் சூத்திரத்தை வியாக்யானிக்கும்போது பகவான் சங்கராச்சாரிய சுவாமிகள் இங்ஙனம் கூறுகின்றார்: "சாதாரணமாக ஜனங்கள் அவன் ராஜபக்தன், இவன் குருபக்தன் எனக் கூறுகின்றனர். மற்றொன்றையும் விரும்பாது குரு கைங்கர்யத்தை மாத்திரம் செய்யும்பொருட்டுக் குருவைப் பின்

தொடரும் சிஷ்யனை முன்னிட்டே அவ்வாறு கூறுவதாம். அது போலவே, புருஷனிடத்து அதிப்பிரேமமுள்ள மனைவி தனது பிரியநாயகனை எப்போதும் ஸ்மரிக்கின்றாள். இத்தகைய இடங்களில் மிக ஆவேசத்துடன் வரும் பிரவாகரூபமாகிய ஸ்மரணையைத் தான் குறிப்பிட்டிருக்கின்றது" இது தான் பக்தி. (வரும்)

## யுத்தம்.

இப்போது நடைபெற்றுவரும் யுத்தம் நேச ராஜாங்கத்தார்க் கநுகூலமாகவே யிருக்கின்றது; எங்கும் அவர்கள் வெற்றி பெற்று வருகின்றனர். மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும், பிரஞ்சுக்காரரும் ஜெர்மானியரைப் பின் தள்ளிக்கொண்டு முன்னேறிச் செல்லுகின்றனர். கிழக்கரங்கத்தில் ருஷ்யரும் கலீஷியாவைக் கடந்து கார்ப்பேதியன் மலைப்பிரதேசத்தில் வந்திருக்கின்றனர். சலோனிக்காவிலும் நேசராஜாங்கத்தார் பல்கேரியரைப் பின் தள்ளிக்கொண்டு முன்னேறிச் செல்லுகின்றனர். ரொமேனியரும் டிரான்ஸில்வேனியாவில் பிரவேசித்து ஆஸ்டிரியருடன் சண்டை செய்து வருகின்றனர். ரொமேனியா சண்டையில் பிரவேசித் திருப்பதை நோக்கி ஜெர்மனி அதனை அழிக்கப் பெரும்பிரயத்த னஞ்செய்து வருகின்றது. ரொமேனியருக்கு ருஷ்யர் உதவி செய்து வருகின்றமையின் ஜெர்மனியின் உத்தேசம் நிறைவேறுவது கஷ்டசாத்தியமாம்.

இத்தாலியப் போர்முகத்தில் இத்தாலியர் தடைபடாது முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றனர்; அவர்கள் டிரியஸ்ட் நகரத்தைப் பிடிக்கப் பெரும்பிரயத்தனஞ் செய்துவருகின்றனர்.

இந்தப்போர் சமீபகாலத்தில் முடிவுபெறுமென்று தோன்ற வில்லை. பிரிட்டிஷ் மந்திரிகளெல்லாம் இப்போதுதான் யுத்தம் ஆரம்பமாயிருக்கின்றதென்றும், அது முடிவதற்குக் குறைந்தது ஒருவருடகாலமாகுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். அவ் வாறாயின் உலகம் பெரிதும் கஷ்டமடைவதாம். கடவுள் கிருபையி னால் இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறுதல் வேண்டும்.